Journal of Management and Economics (JME)
Faculty of Management and Commerce |South Eastern University of Sri Lanka
ISSN 2950-7227 | Vol: 1 | Issue: II| July 2023

# வணிக வங்கிகளின் தனிநபர் கடன் பயன்பாட்டின் வினைத்திறன் பற்றிய ஆய்வு

**Priyatharshany Chadakopan[1] Jeyapraba Suresh[2]**

Department of Economics, Faculty of Commerce and Management, Eastern University, Sri Lanka.
Correspondence: saikajaan2015@gmail.com, sureshj@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இவ் ஆய்வின் நோக்கம் அரச அலுவலகங்களில் பணிபுரிகின்ற கீழ்நிலை ஊழியர்களினால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற தனிநபர் கடன்களின் வினைத்திறனான பயன்பாட்டை மதிப்பீடு செய்வதாகும். இதற்காக தனிநபர் கடன்களின் சமூக, பொருளாதார விளைவுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக கடன்கள் வழங்கப்படுவதன் நோக்கம் பெறுபவர் மற்றும் அவரில் தங்கிவாழ்வோரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் அல்லது பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துவதாகும். ஆனால் பெறப்படுகின்ற எல்லா தனிநபர் கடன்களும் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்வடையச் செய்கின்றதா? என்பது இங்கு வினாவாகும். இவ்வாய்விற்காக மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ள அரச அலுவலகங்களில் பணிபுரிகின்ற 100 கீழ்நிலை ஊழியர்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஆய்விற்குத் தேவையான தகவல்களை கள ஆய்வு, நேர்காணல், அவதானம் மற்றும் ஆவணப்பகுப்பாய்வு ஆகிய வழிமுறைகளினூடாகப் பெறப்பட்டு அவை வீதாசாரப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. தரவுப் பகுப்பாய்வின் பிரதான முடிவாக பெறப்படுகின்ற கடன்கள் குறிப்பிட்ட தேவைகளுக்கு பயன்படுத்தப்படாமை, பெறப்படுகின்ற கடன்களின் அளவு போதாமை, கடன்கள் முறையாக பயன்படுத்துவதற்காக அறிவூட்டப்படாமை, மீள்செலுத்தும் இயலுமைக்கு அதிகமாக கடன்களை பெற்றுக் கொள்ளல் போன்ற காரணங்களால் ஏற்படுகின்ற பல்வேறு சமூக பொருளாதார பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே மேற்குறித்த காரணங்களால் தனிநபர் கடன்கள் வினைத்திறனற்றவையாக அமைந்துள்ளன என்பதே ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே வங்கிக் கடன்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக கடன் வழங்குனர் என்றவகையில் வங்கிகள், கடன்படுனராகிய ஊழியர்கள், அரசாங்கம் மற்றும் கொள்கைவகுப்பாளர்கள் ஆகிய அனைத்து தரப்பினரும் பங்காளர்களாக தமது பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றுதல் வேண்டும். மேலும் கடன்கள் வழங்கப்படுகின்ற போது அவை முறையாக பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான ஒர் நுட்பமுறைமை உருவாக்குதல் வேண்டும்.

**முதன்மைச் சொற்கள்** : கடன், வினைத்திறன், வாழ்க்கைத்தரம், அரச ஊழியர்கள், வணிக வங்கிகள்

## 1. ஆய்வின் அறிமுகம்

சர்வதேச ரீதியாகவே காணப்படும் பொதுவான ஒரு விடயம் மக்கள் தங்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் அல்லது தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்தல், வியாபாரங்களை விரிவாக்குதல் போன்ற பல்வேறுபட்ட தேவைகளுக்காக வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகும். அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள வெற்றிகரமாக செயற்படுகின்ற நிறுவனங்களும் தனிநபர்களும் அவர்களது வியாபாரச் செயற்பாடுகளை திறம்படக்கொண்டு செல்வதற்கும் தனிப்பட்ட வாழ்க்கையை சிறப்பாக வாழ்வதற்கும் வங்கிக்கடன்களை அதிகம் பயன்படுத்துகின்றனர் (Bettiet , 2001). எவ்வாறெனினும் பல வியாபார நிறுவனங்களும் தனிநபர்களும் தங்களுடைய வினைத்திறனற்ற நிதி முகாமைத்துவம் காரணமாகத் தோல்வியடைகின்றனர். அதன் காரணமாக வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் (Campbell, 2006). மேலும் தனிநபர் கடன்கள், பெற்றுக்கொள்ளப்படும் நோக்கங்கள் தொடர்பாக வரையறைகள் அற்றவையாகக் காணப்படுகின்றன. அதன் காரணமாக கடன் பெறுநரின் தவறான தீர்மானங்களினால் அவர்களது வாழ்க்கை கேள்விக்குறியாகி விடுகின்றது.

பொதுவாக அரச ஊழியர்களாக இருக்கின்ற நபர்களுக்கு சம்பளமானது நிலையான ஒரு அடிப்படையிலேயே வழங்கப்படும். மேலும் வருடாந்த படியேற்றம் தவிர வேறு எந்தவொரு சம்பள அதிகரிப்பும் வழங்கப்படுவதில்லை. இவ்வாறான சூழ்நிலையில் அவர்களது பெரிய அளவிலான தேவைகளை உதாரணமாக காணிக் கொள்வனவு, வீடு திருத்தம், மற்றும் அவசர வைத்திய செலவுகள் போன்றவற்றை ஈடுசெய்வதற்கு இவர்கள் பெரும்பாலும் வங்கிக் கடனிலேயே தங்கியிருக்க வேண்டி ஏற்படுகின்றது. Ece Demir (2020) இன் கருத்தப்படி "தனிப்பட்ட ஒவ்வொரு நபரும் திரண்ட கடன் நிலுவையை செலுத்துவதற்கும், பெறுமதி கூடிய கொள்வனவிற்கும், வீடு திருத்தம் மற்றும் அவசர பயன்பாட்டுக்கும் வங்கிக் கடன்களைப் பெற்றுக் கொள்கின்றனர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மாதாந்தம் சராசரியாக ரூபா 40,000 சம்பளமாக பெறுகின்ற ஒருவருக்கு வங்கிகளால் ரூபா 1500000 வரையான வங்கிக்கடன் வழங்கப்படுகின்றது. அதற்கான வருடாந்த வட்டியாக 25% - 30% அறவிடப்படுகின்றது. மேலும் அதன் மீளச்செலுத்தும் கால எல்லை உயர்ந்த பட்சமாக 10 வருடங்கள் அதாவது 120 தவணைக் கட்டணங்களாக நிர்ணயிக்கப்படுகின்றது. இக்காலப்பகுதியில் நாட்டில் நிலவுகின்ற பல்வேறு காரணங்களினால் பணவீக்கம் அதிகரிக்கின்றது. அதனால் அவர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்கின்றது, எனினும் அதற்கு நிகராக வருமானம் அதிகரிப்பதில்லை.

மத்திய வங்கி ஆண்டறிக்கை (2022) இன்படி இலங்கையின் பணவீக்கம் 2018 இல் 2.14% ஆகவும் 2019 இல் 3.52% ஆகவும் 2020ஆம் ஆண்டில் 6.15% ஆகவும் மற்றும் 2021 இல் 7.01 ஆகவும் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லும் போக்கினையே காட்டுகின்றது. மேலும் 2020ஆம் ஆண்டின் வாழ்க்கைச்செலவுச் சுட்டெண் 6.2% ஆகக் காணப்படுகின்றது. ஆனால் கனடா, அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்தி

அடைந்த நாடுகளில் வாழ்க்கைச்செலவுச் சுட்டெண் 1% இற்கும் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழும் நிலையான வருமானம் பெறும் ஊழியர்களால் வாழ்க்கைச் செலவை சமாளிப்பதென்பது கடினமான விடயமாக உள்ளது.

மாதாந்த வருமானத்தில் பெரும் பகுதியினை கடன்மீள் செலுத்துவதற்கு செலவிட வேண்டியுள்ள அரச ஊழியர்கள் அவர்களுக்கு கிடைக்கும் மீதி வருமானம் தங்களது குடும்ப வாழ்க்கையை திறம்படக் கொண்டு நடாத்துவதற்கு போதுமானதாக இல்லாத காரணத்தினால் இவர்கள் தங்களது தனிப்பட்ட வாழ்க்கையிலும் அலுவலக வாழ்விலும் சமுகத்திலும் பல்வேறு இடர்களினை எதிர் கொள்கின்றனர். அத்துடன் இவர்களது வாழ்க்கைத்தரமும் கீழ் நிலைக்குச் செல்வதுடன் வறுமையின் பிடிக்குள் அகப்படுகின்றனர். மேலும் அவர்கள் என்ன தேவைக்காகக் கடன் பெற்றுக் கொண்டோம் என்பதைக் கூட மறந்து விடுகின்றனர். அத்துடன் மேலும் மேலும் அவர்களது வாழ்க்கை நிலை மோசடைகின்றது. எனவே வங்கி கடன்களால் கீழ் நிலை அரச ஊழியர்கள் எதிர் நோக்குகின்ற தாக்கங்களை ஆய்வு செய்வதும் அதற்கான தீர்வுகளை கண்டறிவதுமே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## 2. இலக்கிய மீளாய்வு

‘‘கடன்’’ என்பது பணத்தைப் பெறல் எனப்பொருள்படும். அதாவது தனியாள் ஒருவர் திருப்பிச் செலுத்தும் நோக்கத்துடன் காலம், நேரம், வட்டிவீதம் என்பவற்றுக்கு அமைவாக பெற்றுக்கொள்கின்ற ஒரு தொகையாகும். இன்னுமொரு வகையில் கூறுவதாயின் நிதியை திருப்பிச் செலுத்தும் அக்கறையின்பால் உட்படுவதாகும் (Betti, et al., 2001). அவை ஓர் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அரச தனியார் நிறுவனங்களிலோ அல்லது தனிநபர்களிடமோ பெற்றுக் கொள்ளப்படும். ‘‘கடன்’’ நிதி நெருக்கடியான சூழ்நிலையில் ஒருவரை கட்டுப்படுத்தும் கருவியாகத் தொழிற்படுகின்றது.

‘‘வாழ்க்கை வட்ட வருமானக் கோட்பாட்டின்’’ ஊடாக மக்கள் ஏன் தாங்கள் பெற்றுக்கொள்ளும் வருமானத்திற்கு மேலதிகமாக கடன் சுமைக்குள் செல்கின்றனர் என்பதற்கான விளக்கம் முன்வைக்கப்படுகின்றது. அதாவது இளம்வயதில் ஆதனங்களை வைத்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற கடன்களினுடாக பின்வயதில் அதிகளவு சேமிப்பினை மேற்கொள்ள முடியும். மேலும் வயது செல்லச்செல்ல தங்களுடைய நிதி வளத்தை செலவு செய்ய முடியும் (Betti, et al., 2001) இக் கோட்பாட்டின்படி பொதுவாக கடன்பெறுதலானது ஒரு பிரச்சினையற்றதும் புதுமையானதுமான விடயமாகும். அதாவது போதுமான வருமானம் பெற்றுக்கொள்ளப்படும் நிலைக்கு வரும்முன்பே நபர்களினுடைய கொள்வனவு சக்தியை அதிகரிக்கின்ற பண்பு கடன்களுக்கு உண்டு. அறிவுடைய நுகர்வோர் அதனை சிறந்த முறையில் பயன்படுத்தி பிற்காலத்தில் அதனை எதுவித சிரமமுமின்றி மீளச்செலுத்தி முடிப்பர். வாழ்க்கை வட்டக் கோட்பாடானது நேரத்துக்கே முக்கியத்துவம் வழங்குகின்றது. இதன்படி தற்போதைய வருமான மட்டத்தினைவிட அதிகமான அளவில் நுகர்வைச் செய்வதற்கு தீர்மானிக்கின்றனர்

(Mushtaq & Rauf, 2011). இவ் நுகர்வு நடத்தையானது வீட்டுத் தேவைக்கான கடன்தொகையின் அளவை மிக அதிகமாக்குகின்றபோது நீண்ட காலத்தில் அவர்கள் எதிர்பார்க்கின்ற வருமான மட்டமானது அதிகரிக்காத சந்தர்ப்பத்தில் அவர்கள் மிகநெருக்கடியான ஓர் சூழ்நிலைக்குள் தள்ளப்படுகின்றனர். எனவே அவர்களின் செலவிடத்தக்க வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு மீளச்செலுத்தும் கடன் தொகை தீர்மானிக்கப்டும் போது கடன் ஒரு வரப்பிரசாதமாக கடன்படுநருக்கு அமைகின்றது.

கடன் தொடர்பான போக்குகள் மக்கள் தொகை, சமூகப் பொருளாதாரக் காரணிகளால் பல்வேறு மட்டங்களில் செல்வாக்குக்கு உட்படுத்தப்படுகின்றன. உதாரணமாக அதிகளவான வருமானத்தை உழைக்கின்ற நபர் அதிகளவான கடனைக் கொண்டிருக்கின்றார். ஏனெனில் அதனை மீளச்செலுத்துவது அவருக்கு இலகுவானது. Jha & Hui (2012) என்பவர்களின் கருத்துப்படி குறைந்தளவான வருமானத்தை ஈட்டுகின்ற ஒரு நபரை விட அதிகளவான வருமானம் பெறுகின்ற ஒரு நபர் அதிகளவு கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதில் நாட்டமுடையவராக இருக்கின்றார். சமூகத்திலுள்ள சமூக, பொருளாதாரக் குழுக்களை நாம் வேறுபடுத்துகின்ற போது அவர்கள் கடன்களுக்குள் எவ்வாறு உள்வாங்கப்படுகின்றனர், தனிநபர்கள் கடனை எவ்வாறு கருதுகின்றனர் என்பதனை வைத்து பல்வேறு பகுதியினரை அடையாளம் காணலாம். இதன்படி நோக்குகின்ற போது உயர் சமூக பொருளாதார நிலையைக் கொண்டோர் பல்வேறு பட்ட மூலங்களிலுமிருந்து நிதிதொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். மேலும் தனிப்பட்ட முதலீடு தொடர்பாக உலகியலுக்குப் பொருத்தமான அணுமுறையினை பின்பற்றுகின்றனார்.

Garman & Forgue (1997) என்பவர்களின் கருத்துப்படி நிதிரீதியாக ஆரோக்கியமாக இருப்பதென்பது தனிப்பட்ட ரீதியிலான நிதி முகாமைத்தினூடாக ஏற்படுத்தப்படும் முக்கியமான ஓர் விடயமாகும். தனிப்பட்ட முகாமைத்துவம் என்பது தனிப்பட்ட மற்றும் குடும்ப வளங்களை முகாமை செய்து நிதி ரீதியிலான வெற்றிகளை அடைவதாகும். நிதி ரீதியிலான வெற்றிகளை அடைவதென்பது நிதிவிடயங்களை திட்டமிடல் மற்றும் நிறைவேற்றுதல் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஆசைகளை பூர்த்தி செய்வதாகும். அது நிதிரீதியிலான நீண்டகால இலக்கு அடைவுத்திட்டங்கள், வருமான செலவு முகாமைதுவம், நீண்ட மற்றும் குறுங்கால பாவனையுடைய பொருட்களின் கொள்வனவு, காப்புறுதி, வீடு கொள்வனவு, வாகன கொள்வனவு போன்றவற்றை உள்ளடக்கியதான நிதி பிரயோகம் மற்றும் எதிர்கால தேவை கருதி முதலீடு செய்தல் என்பவற்றை உள்ளடக்கும்.

Khandker (1998) என்பவரின் கருத்துப்படி நிதிசார் அறிவு மக்களின் உழைக்கும் இயலுமையை அதிகரிக்கவும் அதை முகாமை செய்யவும் உதவுகின்றது. அதாவது கல்வி, சுகவீனம், தொழில் இழப்பு, ஓய்வுக் காலம், போன்ற விடயங்களை சிறப்பாக முகாமை செய்யகூடியதாக இருக்கின்றது. அத்துடன் இத்திறனூடாக சந்தையில் மிகவும் பெறுமதியுடைய பொருட்கள் மற்றும் சேவைகளை தெரிவு செய்யவும், மிக சாத்தியமான குறைந்த விலையை செலுத்தவும் முடிகின்றது. இத் திறன் ஒப்பீட்டு முறையான கொள்வனவினை உருவாக்குவதுடன் அதனூடாக சேமிப்பினையும்

அதிகரிக்கின்றது (Servon, & Kaestner, 2008). இவ்வாறாக நிதியீட்டம், கடன்பெறுதல் மற்றும் கடன் தொடர்பாக தனிநபர் நடத்தை என்பன பற்றி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

## 3. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வு தரரீதியான மற்றும் அளவுரீதியான அணுகுமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. தர அளவீடானது தன்மை மற்றும் நிலை தொடர்பான விடயங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் இது தற்போதைய உண்மைநிலையை வெளிப்படுத்தும் அதேபோன்று அளவுரீதியான மதிப்பீடு தீர்மானம் எடுத்தல் செயன்முறைக்காக பயன்படுத்தப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கு பிரதேசத்தில் 25Km தூரத்தில் அமைந்துள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கியது. இப்பிரதேச மக்கள் அதிகளவு அரச மற்றும் அரசசார்பற்ற துறை ஊழியர்களாகக் காணப்படுகின்றனர். பிரதேசத்தின் மொத்த சனத்தொகை 67094 மற்றும் 45 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதாகும்.

மாதிரிகள் தெரிவில் வசதி மாதிரியெடுப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. காரணம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் கீழ்நிலை ஊழியர்கள் என்பதனால் இவர்கள் அலுவலகத்தின் அளவு மற்றும் தேவையை அடிப்படையாக வைத்து நியமனம் செய்யப்படுகின்றனர். அந்தவகையில் கல்வித் துறையை பொறுத்தரை அலுவலகங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால் அங்கு குறிப்பிடத்தக்களவானவர்கள் பணிபுரிகின்றனர். அதேபோன்று சுகாதாரத் துறையில் சிற்றூழியர்களின் தேவை அதிகமாக இருப்பதனால் அங்கு அதிகமான ஊழியர்கள் பணிபுரிகின்றனர். மேலும் இவ்வாய்வு கடன் பெற்றுக்கொண்டவர்களை மட்டுமே இலக்காக கொண்டிருப்பதனால் சுகாதாரதுறை ஊழியர்கள் அதிகம் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் மொத்தமாக 100 கீழ்நிலை ஊழியர்கள் ஆய்வுக்காகக் தெரிவுசெய்யப்பட்டனர்.

தனிநபர் கடன் தொடர்பான போதுமான தகவல்களை திரட்டுவதற்கான முறையாக வடிவமைக்கப்பட்ட வினாக்கொத்தானது மாதிரிகளிடம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டு பூர்த்தி செய்து பெறப்பட்டது. இவர்கள் 100 பேரும் வங்கியில் கடன் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே ஆகும். கடன் பெற்றுக் கொண்டவர்களின் விடயங்கள் அலுவலகத்திலிருந்து முன்பே பெற்றுக்கொள்ளப்பட்டு அவர்களது அனுமதி பெறப்பட்ட பின் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டது. மேலும் நேர்காணல் மற்றும் நேரடி அவதானிப்புக்கள் மூலமும் தரவுகள் பெறப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் விபரண ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன.

## 4. தரவுப்பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

வங்கிக்கடன் பெற்ற கீழ்நிலை அலுவலர்கள் தொடர்பான தனிப்பட்ட விடயங்கள் மற்றும் கடன்களின் பொருளாதாரப் பயன்பாடு, அதற்கான வரையறைகள்,

கடன்களின் சமூக விளைவுகள் போன்ற விடயங்கள் மற்றும் கடனிற்கு பின்னரான சவால்கள் போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்படுகின்றது.

**அட்டவணை 1: தனிப்பட்ட தகவல்கள்**

| குடியியல் பண்புகள் | விகிதாசாரம் (%) |
|---|---|
| **பால்** | |
| • ஆண் | 22 |
| • பெண் | 78 |
| **வயது** | |
| • 18 – 27 | 15 |
| • 28 – 37 | 25 |
| • 38இற்கு மேல் | 60 |
| **கல்வித்தரம்** | |
| • முதல்நிலைக்கல்வி | 06 |
| • இரண்டாம்நிலைக்கல்வி | 82 |
| • மூன்றாம்நிலைக்கல்வி | 12 |
| **திருமணநிலை** | |
| • திருமணமானவர்கள் | 72 |
| • தனிநபர் | 14 |
| • விவாகரத்து பெற்றவர் | 02 |
| • விதவை அல்லது தபுதாரர்கள் | 12 |
| **சேவைக்காலம்** | |
| • 1-5 வருடங்கள் | 05 |
| • 6-10 வருடங்கள் | 35 |
| • 10 வருடங்களுக்கு மேல் | 60 |
| **கடன் எண்ணிக்கை** | |
| • ஒன்று | 37 |
| • ஒன்றுக்கு மேல் | 63 |

***மூலம்: ஆய்வுத்தரவுகள், 2022***

அட்டவணை 1ஆனது ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் தொடர்பான தனிப்பட்ட தகவல்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வில் பால் நிலைரீதியாக எவ்வகையானோர் அதிகளவு வங்கிக் கடனை பெறுவதில் நாட்டமுடையவர்களாக இருக்கின்றனர் என்பது தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்படுகின்றது. அட்டவணை 1இன்படி ஆண்களின் எண்ணிக்கை 22 வீதம் எனும் அளவில் மிகக் குறைவாகவும் பெண்களின் எண்ணிக்கை 78 வீதம் எனும் அளவில் மிக அதிகமாகவும் காணப்படுகின்றது. காரணம் பொதுவாக அலுவலகங்களில் ஆண் ஊழியர்கள் கீழ் நிலை ஊழியர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் சுகாதார துறையினரை நோக்கும் போது அங்கு 75 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் பெண்களாக இருக்கின்றனர். எனவே இங்கு மாதிரிகளின் எண்ணிக்கையில் பெண்களின் வீதாசாரம் மிக அதிகமாக

காட்டப்பட்டுள்ளது. அத்துடன் வீட்டுத்தேவையின் நிமிர்த்தம் ஆண்களைவிட பெண்களே அதிகளவு கடன்பெறுபவர்களாகக் காணப்படுகின்றனர்.

மாதிரிகளின் கல்வித்தகைமையை நோக்குமிடத்து மிக அதிகமானோர் (82 வீதம்) இரண்டாம் நிலைக்கல்வித் தகமையுடையவர்களாகவே உள்ளனர். இருப்பினும் 12 வீதமானோர் மூன்றாம் நிலைக் கல்வித் தகமையுடையோராகக் காணப்படுகின்றனர். இவர்கள் வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொண்டு அதனை பூர்த்தி செய்தவர்களாகும். 6 வீதமானோர் முதல் நிலைகல்வித்தரம் கொண்டவர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் சுகாதாரத்துறை ஊழியர்களாவர். இவர்கள் ஆரம்ப காலத்தில் தற்காலிகத் தொழிலாளர்களாக இருந்து பணியில் நிரந்தரமாக்கப்பட்டவர்களாவர். இதில் குறிப்பிடப்படவேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் சிலர் தங்களது கையொப்பத்தைக் கூட இடுவதற்கு முடியாதவர்களாக இருக்கின்றனர் என்பதேயாகும். கல்வி மற்றும் வயது என்பன கடன் தொகையை பயன்படுத்துவது பற்றிய அறிவையும் அனுபவத்தையும் வழங்குகின்ற வலுவான காரணிகளாகும். Herz and Tzannatos (1998), என்பவர்களின் கருத்துப்படி குடும்பம் ஒன்றினுடைய வருமானமட்டம் மற்றும் வறுமை நிலை என்பவற்றை தீர்மானிக்கும் மிக வலுவான காரணி கல்வி ஆகும். கல்வியறிவுடைய ஒரு நபர் எதிர்கால நோக்கத்திற்காக சேமிக்கும் தன்மையுடைய ஒருவராக இருப்பார்.

ஆய்வில் பெறப்பட்ட தகவலின் படி ஊழியர்களில் 72 வீதமான நபர்கள் திருமணமானவர்கள் என்பதுடன் 2 வீதம் எனும் மிகச் சிறிய பிரிவினரே விவாகரத்து பெற்றவர்களாக இருக்கின்றனர். மேலும் 14 வீதமான தனிநபர்களும், 12 வீதமான விதவை அல்லது தபுதாரர்களும் வங்கி கடனைப் பெற்றிருக்கின்றனர். இங்கு திருமணமானவர்கள் தமது குடும்பச் சுமை காரணமாக தமது வாழ்வை சீராக நடாத்தி செல்லும் பொருட்டு கடன்களை பெற்றுக்கொள்ளுகின்றனர் என்பது தெளிவாகின்றது. ஆய்வின் படி சேவைக்காலம் குறைவாகக் காணப்படும் (05 வருடங்களுக்கு கீழ்) நபர்கள் மிக குறைந்தளவிலேயே வங்கிக் கடன்களை பெற்றுக்கொண்டிருக்கின்றனர். ஆனால் 10 வருடங்களுக்கு மேற்பட்டவர்களே (60 வீதமானோர்) அதிகளவு கடன்களை பெற்றுக் கொண்டவர்களாக உள்ளனர். காரணம் இவர்கள் திருமணமானவர்களாகவும், குடும்பச் சுமையுடையவர்களாகவும் உள்ளனர். இதன் காரணமாக இவர்களுடைய நிதித் தேவை அதிகமானதாகக் காணப்படுகின்றது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களது வருமான வீச்சைப் பார்ப்போமானால், ரூபா 24,250 தொடக்கம் ரூபா 38,990 வரையான அடிப்படைச் சம்பளங்களை பெறுபவர்களாக காணப்படுகின்றனர். வங்கிகளின் கருத்துப்படி இவர்களுக்கு அதிஉச்சமட்டமாக ரூபா 1,500,000 வரையான கடன்தொகை வழங்கக் கூடியதாகவுள்ளது. அதற்காக 10 வருடங்களுக்கு மாதாந்த தவணைக்கட்டணமாக ரூபா 20,000 அறவிடப்படுகின்றது. இதனைவிட மேலும் குறிப்பிட்ட வீதத்தினர் சில நிறுவனங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கடன்களை பெற்றுக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் சுகாதாரத்துறை ஊழியர்களாகவே காணப்படுகின்றனர். காரணம் அவர்கள் ஏனைய துறையினரைவிட அதிகளவு மேலதிக நேரக்கொடுப்பனவு மற்றும் பிற நலன்களைப் பெற்றுக்கொள்வதனால் கிடைக்கின்ற

செலவிடத்தக்க வருமானம் அதிகமாகும். இதுமட்டுமன்றி இவர்களுக்கென தனியான ஒரு சுகாதாரத்துறை கூட்டுறவு சங்கம் உள்ளது. அதில் அங்கத்தவர்களாக இருக்கின்றவர்கள் தங்களுக்கு தேவையான அனைத்து நிகழ்வுகளுக்கும் கடன்களை பணமாகவும் பொருட்களாகவும் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறான காரணத்தினால் இவர்கள் தம்மையறியாமலேயே கடன் பொறிக்குள் சிக்கிக்கொள்கின்றனர். அதுமட்டுமன்றி இக்கடன்பொறி ஓர் தொடர்நிகழ்வாக ஓய்வுக்காலம் வரை தொடர்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆய்விற்கு உட்படுத்தப்பட்டவர்களில் 63 வீதமானோர் ஒன்றுக்கு மேற்பட்ட கடன்களைக் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் தமது வருமானத்தில் 50 வீதத்துக்கு மேற்பட்ட தொகையை கடன்மீளச்செலுத்துவற்கு செலவிடுகின்ற போது அவர்கள் தமது அன்றாட வாழ்வைக் கொண்டு நடாத்துவதற்காக கிடைக்கின்ற தொகையானது வாழ்க்கைச் செலவை மேற்கொள்வதற்கு போதியதாக இல்லாத காரணத்தினால் அதனை சமாளிப்பதற்காக மீண்டும் பிறிதொரு கடன்மூலத்தை நாடுகின்றனர். இதன்காரணமாக அவர்களது பொருளாதார நிலை முன்பு இருந்ததைவிட கீழ்நிலைக்குச் செல்கின்றது.

மேலும் தகவல் வழங்குனருடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டபோது கிடைக்கப்பட்ட தகவல்களின் படி 90 வீதமானவர்கள் தாம் கடனுக்கு விண்ணப்பித்த வேளையில் குறிப்பிடப்பட்ட தேவைக்காக தமது கடனை பயன்படுத்தவில்லை என அறிய முடிந்தது. இங்கு குறிப்பிடப்பட்ட விடயம் வங்கிக் கடன்கள் காணிக்கொள்வனவு, மற்றும் வீடு திருத்தம் ஆகிய இரு தேவைகளின் நிமித்தம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்காக உண்மையான உறுதிப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் எவையும் வங்கியினால் கோரப்படவில்லை. இவர்களது வருமானத்தை மட்டும் உறுதிப்படுத்திய பின்பு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக பயன்பாட்டிற்கு எந்தவொரு வரையறையோ நிபந்தனைகளோ இல்லை. இதன்காரணமாக கடன் மூலம் பெற்றுக்கொண்ட நிதியினை தங்களது சொந்த விருப்பின் அடிப்படையில் செலவிடப்பட்டுள்ளதனை அறிய முடிகின்றது. வங்கியில் சொத்துக்கடனை பெற்றவர்கள் (Property loan) மாத்திரமே காணி, வீட்டுத் தேவைகளை நிறைவு செய்துள்ளனர். (உதாரணம் வீடு கட்டுதல், திருத்தம் போன்றவை) பொதுவாக தனிநபர் கடன்கள், ஆடம்பரப் பொருட்கொள்வனவிற்காக செலவிடப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவுகளாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம். தமது சேமிப்பினுடாக அடைய முடியாமலிருந்த சில தேவைகள் தங்களது கடன் மூலம் பூர்த்திசெய்யப்பட்டது என்றார்கள். அவர்களது கடன் நிதிப் பயன்பாடு பின்வருமாறு அமைந்திருந்தது. மோட்டார் சைக்கிள் கொள்வனவு, வீட்டு உபயோகப்பொருட்களின் கொள்வனவு, திருமணம், பிறந்தநாள் நிகழ்வுகள், மரணக்கிரியை நிகழ்வு என்பனவற்றிற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறான காரணங்களால் கடன்கள் மூலம் வினைத்திறனான விளைவு ஏற்படுத்தப்படமாட்டாது. சமூகத்திலுள்ள ஏனைய உயர்வர்க்கத்தினருடன் தம்மை ஒப்பீடு செய்து அதற்கு சமமாக தங்களது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்த முயற்சிக்கின்ற ஒரு முயற்சியின் விளைவாகவே இதனைப் பார்க்க வேண்டியிருக்கின்றது.

இவ்வாய்வின் மூலம் ஊழியர்களை கடன்பெற்றுக்கொள்ள தூண்டிய காரணிகள் எவை என ஆராயும்போது, அவை போதுமான மாதாந்த வருமானம், இருக்கத்தக்க

சேமிப்புக்களின் அளவு, எதிர்பாராத காரணங்களால் ஏற்படக்கூடிய வருமான குறைவுகள், பாரிய பிரதான செலவுகள், வருமான மூலங்களில் செய்யத்தக்க முதலீடுகள் போன்றனவாக இருந்தது. பொதுவாக தற்போதைய வாழ்கை முறைகள் திட்டமிடப்படாத ஓர் தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றது. ஆய்வில் 70 வீதமானவர்கள் தெரிவித்த கருத்து தாங்கள் எதுவித சேமிப்புக்களையும் கொண்டிருக்கவில்லை என்பதாகும். நேர்காணலின்போது அவர்கள் வழங்கிய பதில்கள் மூலம் இவற்றை உணரக்கூடியதாகவுள்ளது. அவையாவன:

- குறைந்த வருமானம் மட்டம்.
- நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான போதிய சேமிப்புக்கள் இன்மை.
- எதிர்பாராத நிகழ்வுகள் அல்லது இழப்புக்களை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் இன்மை.
- திடீரென வருமானம் தடைப்படும் போது அதனை முடிவுக்கு கொண்டுவர நீண்டகாலம் தேவைப்படுகின்றமை.
- ஓரே ஒரு வருமான மூலத்தில் மட்டும் தங்கியிருத்தல்.
- வாழ்க்கை போட்டிதன்மையுள்ளதாக இருக்கின்றமை.

கடன்வகைகளையும் தொகைகளையும் தெரிவு செய்வது தொடர்பாகவும் கடன்கள் வழங்கப்படும் போது அவற்றுக்காக விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் நியதிகள் பற்றிய அறிவு மற்றும் திறன்கள் கொண்டிருக்கும் போதுதான் சரியான பொருத்தமான கடன்களை ஊழியர்களால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அப்போதுதான் அது பயன்தரக்கூடியதாகவுமிருக்கும். அத்துடன் கடன் தொடர்பான அரச கொள்கைகள் சட்டங்கள் பற்றியும் அவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

இவ்வாய்வு கடன் பெற்றுக்கொண்ட ஊழியர்களுடைய அறிவு தொடர்பாக பரீட்சித்துள்ளது. அதாவது பெற்றுக்கொள்ளும் கடன்கள் தொடர்பாக அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டதா என ஆராயப்பட்டது. இதன்போது வங்கியினால் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பாக எந்தவொரு அறிவூட்டமும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. இவை அவர்களிடம் நேர்காணலின் போது கிடைக்கப்பட்ட தகவல்களினூடாக வெளிப்படுத்தப்பட்டது. அத்தகைய வெளிப்பாடுகள் பின்வருமாறு:

- வட்டி வீதம் பற்றி எந்தவொரு அறிவுமின்றி கடன்பெறப்பட்டுள்ளது.
- வங்கிகள் தமது இலக்கினை அடைவதனை மட்டுமே இலக்காகக் கொண்டு கடன் வழங்குகின்றமை.
- கடனின் நியதி மற்றும் நிபந்தனைகள் எதனையும் வாசித்து விளங்கிக்கொள்ளாமை.
- பொதுவாக நிதி நிறுவனங்களில் கிடைக்கக்கூடிய கடன் வகைகள் பற்றிய போதிய தகவல்களை அறிந்து கொள்ளாமை.
- சிறந்த கடனைப் பெற எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளாமை.
- கடன் தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பாக எந்த அறிவூட்டமுமில்லை.

எனவே மேற்குறித்த ஆய்வுத் தகவல்களின் மூலம் ஊழியர்கள் கடன் தொடர்பாக போதுமான அறிவை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. மேலும் நிதிநிறுவன முகாமையாளர் அல்லது ஊழியர்களால் கூட இது பற்றிய தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது புலனாகின்றது. இது கடன் பெற்ற நபர்கள் அக்கடன் தொகையை வினைத்திறனாக பயன்படுத்தாமைக்கான வலுவான காரணமாகும். Rajct (2007), என்பவரின் கருத்துப்படி நிதிவிடயங்கள் தொடர்பான தெளிவான அறிவுடையவர்களாக கடன் பெறுநர் இருக்கின்ற ஓர் நாட்டில் எதிர்கால பொருளாதார நலன்கள் நல்ல முறையில் அமையும். எனவே நிதியியல் நடத்தைகள், அதனுடான இலக்கு அடைவுகள் மற்றும் நிலைபேறான தன்மை என்பவற்றை ஏற்படுத்த கடன் பெறுநர் மற்றும் கடன் வழங்குனர் ஆகியோருக்கிடையிலான இணைப்பும் அவசியமாகும்.

சமூகப் பொருளாதார பிரச்சனைகள் என்பது மாதாந்த வருமானத்தினுடைய அளவு, பொருளாதார கஷ்டங்கள், நிதிபெறும் வழிமுறைகளை இனங்காணல் என்பவை உள்ளடங்கலாக காணப்படுகின்றன. தகவல் வழங்குனர்களுக்கிடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் அறியப்பட்ட விடயம் மாதத்தின் நடுப்பகுதியிலேயே தங்களது மாதாந்த செலவிடத்தக்க வருமானம் முடிவடைந்து விடுவதாகவும் பின்னரான காலப்பகுதிக்கான செலவுகளுக்காக ஏனைய ஊழியர்களிடம் கடன்பெறல் மற்றும் வேறு வழிகளினூடாக செலவிற்கான பணத்தை பெற்றுக்கொள்ளவேண்டி ஏற்படுவதாகவும் குறிப்பிட்டனர். இந்நிலைமை தாங்கள் வங்கிக்கடனை பெற்றுக்கொண்ட பின்னரே ஏற்பட்டதாக குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஊழியர்கள் பின்வரும் வெளிப்படுத்தல்களை காட்டினர். 48 வீதமானோர் தங்களது வழமையான செலவுகளை குறைத்துக் கொண்டதாகவும், 25 வீதமானோர் நண்பர்கள் உறவினர்களிடமிருந்து கடன் பெறுவதாகவும், 10 வீதமானோர் புதிய கடன் மூலங்களை நாடுவதாகவும், 12 வீதமானோர் சொத்துக்களை விற்பனை செய்வதாகவும், 5 வீதமானோர் தமது அடிப்படைத் தேவைகளை குறைத்துக்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர். பின்வரும் கூற்றுக்கள் குறைவான நிதியியலுமையின் வெளிப்படுத்தல்களாக கொள்ளப்படுகின்றது.

- மனக்கிளர்ச்சியுடனான கொள்வனவுகள்
- ஏற்றுக்கொள்ளப்பட்ட சராசரிக்குக் குறைவான வாழ்க்கைச் செலவு
- சேமிப்பை விட அதிகளவான செலவுகள்
- ஒழுங்கமைக்கப்படாத வகையான நிதிமுகாமைத்துவம்
- மாத இறுதியில் கையில் பணமின்றியிருத்தல்
- அதிக கடன்சுமை போன்றவை.

ஆய்வின் படி 40 வீதமான ஊழியர்கள் வருமானம் குறைவடைந்ததாகவும் 25 வீதமானோர் தொடர்ச்சியான பணப்பற்றாக்குறையை எதிர்கொள்வதாகவும் 16 வீதமானோர் தமது மாதாந்த கொடுப்பனவுகளை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் 11 வீதமானோர் பணப்பற்றாக்குறை காரணமாக மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் 8

வீதமானோர் தாம் பெற்றுக்கொண்ட கடன் தமது தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர். இச்சூழ்நிலைகளினூடாக அறியப்படத்தக்க விடயம் யாதெனில் ஊழியர்களின் நிதி இயலுமையை கடன்கள் குறைத்துள்ளதென்பதாகும். இதன் காரணமாக அவர்கள் கடன்பெற்றுக்கொள்வதற்கு முன்பிருந்த வாழ்க்கை தரத்தை விட குறைவான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். வருமான அதிகரிப்பினுடைய தாக்கம் வறுமை குறைப்பு, பொருளாதார ஸ்த்திரத்தன்மையை ஏற்படுத்துதல், அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றுதல் போன்றனவாகும். இங்கு கடன்பெற்றுக்கொண்டமை காரணமாக அவர்கள் இது தொடர்பாக எதிர்மறை விளைவுகளை எதிர்நோக்குகின்றனர். இங்கு அவதானிக்கத்தக்க விடயம் கடன்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கமான வாழ்க்கைத்தர உயர்வு, வருமான உயர்வு போன்றவை அடையப்படவில்லை என்பதுடன் மாறாக வறுமையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது எனலாம்.

எவ்வழிமுறைகளினூடாக தமது கடன்கள் மூலமான நலன்களை விருத்தி செய்ய முடியும் என அவர்களிடமிருந்தே முன்மொழிவுளை பெற சில ஆய்வு வினாக்கள் முன்வைக்கப்பட்டதுடன் அதன் வெளிப்படுத்தல்களாக, 20 வீதமானோர், கடன் தொகை அதிகரிக்கப்படவேண்டும் எனவும், 58 வீதமானோர் கடன் பெறும் போது அதுபற்றி அறிவூட்டப்பட வேண்டும் எனவும், 10 வீதமானோர் வட்டிவீதம் குறைக்கப்பட வேண்டும் எனவும் மற்றும் 12 வீதமானோர் பின்தொடர்சேவைகள் வழங்கப்பவேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

## 5. முடிவுரை

இவ்வாய்வு ஊழியர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் வங்கிக்கடன்கள் செலுத்துகின்ற தாக்கம் பற்றிய விடயங்களை கண்டறிவதாகும். இன்னுமோர் வகையில் கூறின் இவ்வாய்வானது வங்கிக் கடன்களின் வினைத்திறனை ஆய்வு செய்கின்றது. இதன் மூலம் கண்டறியப்பட்ட விடயம், ஊழியர்களின் மாதாந்த வருமானம் குறைவாக இருக்கின்ற போது கிடைக்கின்ற வருமானம் தமது தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லாத காரணத்தினால் கடன்களைப் பெற்றுக்கொள்ள முற்படுகின்றனர். எவ்வாறாயினும் உயர்வருமானம் பெறுகின்ற ஊழியர்களைப் பொறுத்தவரை வங்கிக் கடன்கள் அதிக நன்மையுடையதாக இருக்கின்ற அதேவேளை இதனால் அவற்றை வருமானம் பெறக் கூடிய மூலங்களில் முதலீடு செய்வதற்கும் வேறு நபர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கும் இயலுமானதாக உள்ளது. இதன் மூலம் கல்வியறிவு மற்றும் வருமான மட்டம் என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்புடைய ஓர்விடயமாக வங்கிக் கடன்களினால் ஏற்படுகின்ற தாக்கம் அல்லது விளைவுகள் உள்ளமை ஆய்வின் மூலம் புலனாகின்றது. மேலும் உயர் வருமானமுடைய ஊழியர்கள் அதிகளவு முதலீட்டு வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்றனர். அத்துடன் சந்தை நிலை பற்றிய மேலதிக தகவல்களைப் பெறக்கூடியவர்களாகவும், குறைவான வருமானம் பெறும் ஊழியர்களை விட அதிக ஆபத்துக்களை எதிர்கொள்ளத் தயாராக இருப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். எனவே அச்சுறுத்தல்கள் எதுவுமின்றி வாழ்வுக்கான அடிப்படைகளை அடைந்து கொள்ள அவர்களால் முடிகின்றது.

மாறாக குறைவருமானம் உடையவர்களைப் பொறுத்தவரை வங்கிக் கடன்கள் பயனுடையதல்ல. அவர்களது கடன் தொகை புதியதொரு தேவையை பூர்த்தி செய்வதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. கடன் விடயத்தில் நிதிசார் அறிவு, பௌதீகக் காரணிகள் மற்றும் அனுபவம் என்பன அவர்கள் எதிர்நோக்குகின்ற முக்கியமான சவால்களாக உள்ளன. மேலும் ஊழியர் பணிபுரியும் நிறுவனங்கள், அவர்கள் மிகக் குறைவான வட்டியுடைய வங்கிகளில் கடன்களைப் பெற்றுக்கொள்ள அவர்களுக்கு உதவுகின்றன (உதாரணம்: சொத்துக்கடன்). எனினும் அவர்கள் உயர் வட்டியுடைய தனிநபர் கடன்களையே அதிகம் பெற்றுக்கொள்கின்றனர். காரணம் அலுவலக ரீதியிலான கடன்களுக்கான சட்டதிட்டங்கள் அதிகமாகக் காணப்படுவதாகும். மேலும் நிறுவனங்களின் முகாமைத்துவம் ஊழியர் ஒருவர் ஒன்றிக்கு மேற்பட்ட கடன்களைப் பெற்றுகொள்ள அனுமதி அளிப்பதும், ஊழியர்கள் இவ்வாறான சூழ்நிலைக்கு முன் தள்ளப்படுவதற்கான காரணங்களாகும். ஊழியர்கள் அதிக கடன் சுமை காரணமாக எதிர்பாராத சூழ்நிலைகளின் போதும் உடனடியாகவும், எதிர்பாராதளவிலும் பாரிய ஒரு நிதித் தேவைக்குள் உள்ளீர்க்கப்படுகின்றனர்.

பொதுவாக கடன்கள் விரயம் செய்யப்படுவதற்கான காரணங்களில் கவலையீனங்களும் உள்ளன. அதிலொன்று கொள்கை வகுப்பாளர்களின் செயற்பாடுகளாகவும் உள்ளது. சாதாரணமாக ஒரு சூழ்நிலையின் கீழ் வங்கிகளின் முக்கிய நோக்கு வங்கியின் கடன் வழங்கும் சேவையை வழங்குவது மட்டுமல்ல. அதனால் பொதுமக்கள் நிதித் தேவையை பெற்றுக் கொள்வதில் வரையறைகளை ஏற்படுத்தும் போது இவ் நிறுவனங்களின் பரிமாணம் மாற்றமடைகின்றது. எவ்வாறாயினும் இவ்வாய்வு முடிவு யாதெனில் நிதிசார் அறிவை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்பதுடன் இருக்கின்ற நிதிசார் அணுகுமுறைகள் வினைத்திறனானவை ஆனால் அவற்றின் அமுல்படுத்தலில் குறைபாடுகள் உள்ளன.

**ஆய்வின் போது அடையாளப்படுத்தப்பட்ட சில முக்கிய முடிவுகள்,**

- ஊழியர்கள் தமது மாதாந்த வருமானம் குறைவாக உள்ளபோதும் அவர்களது சேமிப்புநிலை குறைவாக காணப்படும் போதும் கடன்களை நாடுகின்றனர்.
- கடன்கள் குறைவான வருமானம் பெறுகின்ற பகுதியினரை விட அதிக வருமானம் பெறும் பகுதியினருக்கே மிகவும் பயனுள்ளதாக உள்ளது.
- கடன் மூலம் ஊழியர்கள் பெற்றுக் கொள்கின்ற நலன்களை விட கடனுக்கு அறவிடப்படுகின்ற வட்டிவீதத்தின் சுமை அதிகமாக உள்ளது. அதாவது கடன் அவர்களது வருமானத்தை இல்லாமல் செய்கின்ற காரணியாக மாறுகின்றன.
- சில ஊழியர்கள் தனிப்பட்ட ரீதியில் நிதி தொடர்பாக எடுக்கின்ற தீர்மானங்களில் விடுகின்ற பிழைகள் அவர்களை கடனாளியாக்குகின்றது.
- குறைவருமானம் பெறுகின்ற மற்றும் குறைவான கல்வியறிவுடைய ஊழியர்களிடையே தவறுகள் காணப்படுவது பொதுவான அம்சமாக உள்ளது.

- ஊழியர்கள் தமது எதிர்கால நல்வாழ்விற்காக கடன்களை முறையாக பயன்படுத்துவது தொடர்பாக அறிவூட்டப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.
- ஊழியர்களின் அறிவு மட்டம் மற்றும் அவர்களின் நடத்தை என்பவற்றிக்கிடையே தொடர்பு காணப்படுகின்றது. எனவே அறிவு மட்டத்தை உயர்த்துவதனூடாக ஊழியர்களின் தனிப்பட்ட நிதி நடவடிக்கைகள் தொடர்பான நடத்தையில் நேரடியான ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.
- கடன்படுநர் மற்றும் கடன் வழங்குனர் (வங்கி) ஆகியோருக்கிடையிலான முரண்பாடுகள் தோற்றமடைவதற்கான காரணம் வட்டிவீதம் என்பதனை விளங்கிக் கொள்ளத்தக்க ஓர்நிலையை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய நோக்கமாக இல்லாமல் இருப்பது வினைத்திறனற்ற விடயமாக உள்ளது. அரசாங்கத்தினுடைய நோக்கம் ‘‘நடுத்தரவர்க்க மக்களை வலுவூட்டுவதாகும்’’. இதனை வங்கிகள் தமக்குச் சாதகமாக்கி அதிகளவு இலாபத்தினை உழைத்துக்கொள்கின்றன. இன்னுமொருபுறம் ஊழியர்கள் தமது குறுங்கால தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கடன்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

கொள்கைகள் உருவாக்கப்படுகின்ற போது அரசாங்கமும், கொள்கை வகுப்பாளர்களும் உருவாக்கப்படும் கொள்கைகள் பொருத்தமானதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். கொள்கைகளுடன் தொடர்புடைய சகல தரப்பினர்களும் ஒன்றிணைக்கப்படுவதுடன் ஒவ்வொரு பகுதியினரும் தமது பணியைச் சிறப்பாக மேற்கொள்கின்றனரா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக பின் தொடர் நடவடிக்கைகள் அவசியமாகும். நுண்நிதிக் கொள்கைகள் வகுப்பதற்கான தந்திரோபாயங்கள் குறித்தொதுக்கப்பட்டவை. எனவே நிதி நிறுவனங்கள் கடன் திட்டங்களை அறிமுகம் செய்யும் போது கடன்கள் வழங்கப்படும் நோக்கத்தை உறுதி செய்வதுடன் ஊழியர்களின் நலன்களையும் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**

Betti, G., Dourmashkin, N., Rossi, M. C., Verma, V., & Yin, Y. (2001). Study of the Problem of Consumer Indebtedness: Statistical Aspects Contract no: B5-1000/00/000197 Final report.

Garman, E. T., & Forgue, R. E. (1997). Personal finance (5th ed.). Boston: Houghton Mifflin Company.

Jha, S., & Hui, X. (2012). A comparison of financial performance of commercial banks: A case study of Nepal. *African Journal of Business Management*, 6(25), 7601.

Kamal, A. (1996). Poor and the NGO process: Adjustments and complicities. 1987-1994: Dynamics of Rural Poverty in Bangladesh.

Kallomo, C. N. Assessment of the impacts of personal loan on poverty alleviation: a case of capital development authority employees (Doctoral dissertation, The University of Dodoma).

Khandker, S. R. (1998). Fighting poverty with microcredit: experience in Bangladesh. Oxford University Press.

Mushtaq, R., & A Rauf, S. (2011). Economic impact of micro finance on borrowers: Evidence from punjab, Pakistan. Economic Impact of Micro Finance on Borrowers: Evidence from Punjab, Pakistan (July 28, 2011).

Servon, L. J., & Kaestner, R. (2008). Consumer financial literacy and the impact of online banking on the financial behavior of lower-income bank customers. *Journal of consumer affairs*, 42(2), 271-305.